232

232

1945

15 FEB 194

2772

CHILDREN'S STORIES
FROM

INDIAN HISTORY

FOR STANDARD III

By
K. S. SUBRAMANIA AYYAR, B.A., L.T.,

G. V. K. SWAMI & Co.,
PUBLISHERS
KUMBAKONAM :: MADRAS.

பாலர்

இந்திய சரித்திரக் கதைகள்

(மூன்றாவது வகுப்பிற்கு)

2772

15 FEB 1945

954

ஆசிரியர் :

K. S. சுப்பிரமணிய ஐயர், B.A., L.T.,

ஜி. வி. கே. ஸ்வாமி அண் கோ.,

பப்ளிஷர்ஸ்

கும்பகோணம் : : சென்னை

பதிப்புரிமை] 1944 [விலை அணா 6

First Impression 1944

V44

முகவுரை

1939-ம் வருஷம் வெளிவந்துள்ள ஆரம்ப பாடசாலை புதிய பாடதிட்டத்தை அனுசரித்து "பாலர் இந்திய சரித்திரக் கதைகள்," புத்தகங்களை 3, 4, 5, வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படத்தக்க முறையில் எழுதியுள்ளேன். இப் புத்தக வரிசைகளில், கையாளப்பட்டுள்ள வசன நடை மாணவர்கள் மனத்தில் ஊக்கத்தையும், உணர்ச்சியையும் உண்டாக்கக்கூடிய முறையில் எளிய நடையில் அமைந்திருக்கிறது.

தேவையான இடங்களில் உருவப் படங்களும், தேசப் படங்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

ஆசிரியர்களும் கல்வி இலாகா அதிகாரிகளும் இப் புத்தகங்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	தசரதர் சாபம்	... 5
2.	ஸ்ரீராமர் வனவாசமும் தசரதர் மரணமும்	... 6
3.	உத்தம சகோதரன்	... 9
4.	இராவண வதம்	... 10
5.	சூது விரும்பேல்	... 12
6.	பொருமையால் வரும் கேடு	... 13
7.	பகாசுரன் வதம்	... 15
8.	அரிச்சந்திரன் கதை (முதற் பாகம்)	... 16
9.	அரிச்சந்திரன் கதை (இரண்டாம் பாகம்)	... 18
10.	சிபிச் சக்கரவர்த்தி	... 19
11.	புத்தர்	... 21
12.	அசோகர்	... 24
13.	இராணி சம்யுக்தை	... 26
14.	பத்மினி	... 30
15.	பாபர்	... 32
16.	நூர்ஜஹான்	... 34
17.	ஜஹாங்கீரும் நூர்ஜஹானும்	... 35
18.	தஞ்சாவூர்ச் சரித்திரமும் புராணக் கதைகளும்	.. 36
19.	மதுரை சரித்திரமும் புராணக் கதைகளும்	... 39
20.	திருச்சிராப்பள்ளி சரித்திரமும் புராணக் கதைகளும்	... 44
21.	சுந்தர பாண்டியன்	... 49
22.	திருமலை நாயக்கர்	... 49
23.	ராணி மங்கம்மாள்	... 51
24.	ராஜராஜ சோழர்	... 53
25.	சேரன் செங்குட்டுவன்	... 55

பாலர் இந்திய சரித்திரக் கதைகள்

மூன்றும் வகுப்பு

1. தசரதர் சாபம்

கோசலம் என்பது ஒரு நாடு. அயோத்தி அதன் தலைநகர். தசரதர் என்ற சக்கரவர்த்தி அதை ஆண்டு வந்தார். அவர் வில் வித்தையில் மிகத் தேர்ச்சி பெற்றவர். மிருகங்களின் ஓசையைக் கேட்டே அம்பெய்வார். குறி ஒருக்காலும் தவருது.

ஒரு நாள் அவர் காட்டிற்கு வேட்டையாடச் சென்ருர். சமீபத்திலிருந்த ஒரு குளத்தில் ஓர் மிருகம் நீர் பருகும் சப்தம் அவர் காதில் விழுந்தது. சப்தம் வரும் இடத்தை நோக்கி அம்பெய்தார். ஓர் பாத்திரத்தில் நீர் முகந்து கொண்டிருந்த ஒரு பிராமணச் சிறுவன் விலாவில் அது பாய்ந்தது. அவன் ஓவென அலறிக் கீழே விழுந்தான்.

மனிதக் குரலைக் கேட்ட தசரதர், அந்த இடத்திற்கு விரைந்து ஓடினர். சாகும் தருணத்தில் இருந்த சிறுவனைப் பார்த்தார். வயது சென்ற தன் பெற்றோர்களின் தாகத்தைத் தணிப்பதற்குத் தண்ணீர் கொண்டு செல்ல அக்குளத்துக்கு வந்தவன் அச்சிறுவன். அவனுக்கு இக் கதி நேர்ந்தது. தசரதர் மனம் இளகி வருந்தினர். பாத்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அவன் பெற்றோரிடம் சென்ருர். சிறுவன் சற்று நேரத்தில் உயிர் துறந்தான்.

நீரைத் தேடிச் சென்ற மைந்தன் இன்னும் வரக் காணேமே என்று அவனுடைய பெற்ருேர் வருந்திக் கொண்டிருந்தனர். அவர்களுக்குக் கண் தெரியாது. தசரதரது காலடிச் சப்தத்தைக் கேட்டு மைந்தன் வருகிருன் என்று மகிழ்ச்சி அடைந்தனர். ஆனல் தசரதர் நடந்ததைக் கூறினர்.

அப் பெற்ருேர் மனம் பதைத்து கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர். அவர்களுக்கு அம் மைந்தன் ஒரே மகன். அரசன் அறியாமல் செய்த தவறு என்பதை அவர்கள் அறிந்தார்கள். ஆயினும் என் செய்வர்? அரசனுக்கு ஒரு சாபம் இட்டனர். அதாவது, தங்கள் மைந்தன் கடைசி காலத்தில் தங்களுக்கு உதவாமல் போனதுபோல், அம் மன்னன் இறக்கும் தறுவாயில் மக்கள் அண்டையில் இருக்கலாகாது என்று சபித்தார்கள். தசரதர் மனம் நொந்து அவ்விடம் விட்டு அகன்ருர்.

பிள்ளைகளே! அரசன் ஆராயாமல் செய்த காரியத்தின் பலனைப் பார்த்தீர்களா? வேட்டையை நாடிச் சென்றவர் சாபத்தை ஏற்றுக் கொண்டார். விதியை யாரால் வெல்ல முடியும்?

---

2. ஸ்ரீராமர் வனவாசமும் தசரதர் மரணமும்

தசரதச் சக்கரவர்த்திக்கு மனைவிமார் மூவர். அவர்கள் கோசலை, கைகேயி, சுமத்திரை எனப்படுவர். வெகுகாலம் அவருக்குப் புத்திரர் இல்லை. அவர் பல தருமங்கள் செய்தார். பல யாகங்கள் இயற்றி

ணர். புத்திரர் நால்வர் தோன்றினர். கோசலை மகன் ஸ்ரீராமர். கைகேயி மைந்தன் பரதன். சுமத்திரை



ராமர் வில்வித்தை கற்றல்

யின் குமாரர்கள், இலட்சுமணனும் சத்துருக்கனனும் ஆவார்கள்.

அரச குமாரர்கள் நால்வரும் நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தார்கள். தக்க பிராயம் வந்ததும், வில் வித்தை, வாள்வித்தை முதலியவற்றைக் கற்றுக் கொண்டார்கள். அவர் களில் ஸ்ரீராமர் மூத்தவர். அவர் நல்ல குணவான். ஒப்பில்லா வீரர்; யாவராலும் போற்றப்பட்டார். தசரதருக்கு அவரிடத்தில் பிரியம் அதிகம்.

விசுவாமித்திரர் ஒரு பெரிய ரிஷி. காட்டில் யாகம் செய்தார். ராக்ஷசர் என்று சொல்லப்பட்ட துஷ்டர்கள் அந்த யாகத்தைக் கெடுத்தார்கள். தமக்கு உதவி செய்ய, ஸ்ரீராமரைக் காட்டிற்கு அனுப்பும்படி விசுவாமித்திரர் தசரதரை வேண்டிக் கொண்டார். தசரதர் ஒருவாறு சம்மதித்தார். இலட்சுமணரும் ஸ்ரீராமருடன் சென்ருர். அவர்கள் பல ராக்ஷசர்களைக் கொன்றனர். விசுவாமித்திரர் யாகம் நிறைவேறியது.

மிதிலை என்பது ஒரு நகரம்; அதனை ஜனக மகா ராஜா ஆண்டு வந்தார். அவருக்குச் சீதையென்ற அழகான பெண் ஒருவள் இருந்தாள். அவரிடம் ஒரு பெரிய வில் இருந்தது. அதனை வளைத்து நாண் ஏற்றுபவருக்குச் சீதையை மணம் செய்விப்பதாக அவர் தெரிவித்தார்.

விசுவாமித்திரர் ஸ்ரீராம இலட்சுமணருடன் மிதிலை அடைந்தார். ஸ்ரீராமர் வில்லை முறித்துச் சீதையை மணந்தார். எல்லோரும் அயோத்திக்குத் திரும்பினுர்கள்.

தசரதருக்கு வயது முதிர்ந்தது. கிழப்பருவம் அடைந்தார். ஸ்ரீராமருக்கு முடிசூட்ட எண்ணினுர். அச்சமயம் அவருடைய மனைவி, கைகேயி குறுக்

கிட்டாள். முன்பு தனக்குக் கொடுப்பதாகச் சொன்ன இரு வரங்களை அப்பொழுது கேட்டாள். அவற்றின்படி ஸ்ரீராமர் பதினான்கு வருஷம் காட்டில் வசிக்கவேண்டுமென்றும், தன் மகன் பரதன் நாட்டை ஆளவேண்டுமென்றும் கூறினாள்.

என்ன செய்வார் தசரதர்? சொன்ன சொல் மாறாதவர். துன்பக் கடலில் ஆழ்ந்தார். தந்தை சொல்லைக் காப்பாற்ற ஸ்ரீராமர் காட்டிற்குச் சென்றார். இலட்சுமணரும், சீதையும் கூடச் சென்றார்கள். ஸ்ரீராமரின் பிரிவால் சோகமுற்றுப் பின் உயிர் நீத்தார் தசரதர். அச்சமயம் பரத சத்துருக்கனரும், அயோத்தியில் இல்லை. வெளி நாடு சென்றிருந்தனர்.

பிள்ளைகளே! சாபம் பலித்த விதத்தைப் பார்த்தீர்களா? நீங்கள் ஒரு நாளும் பெரியோரிடத்தில் தவறு செய்யலாகாது.

---

3. உத்தம சகோதரன்

முன் பாடத்தில், ஸ்ரீராமர் இலட்சுமணருடனும், சீதையுடனும் காட்டிற்குச் சென்றார் என்று படித்தீர்கள். வெளி நாடு சென்றிருந்த பரதன் அயோத்தி வந்து சேர்ந்தார். தன் தாயினிடமிருந்து நடந்தசெய்தியைத் தெரிந்துகொண்டார். தமையன் காடு செல்லவும், தந்தை இறக்கவும் தன் தாயே காரணம் என்று அறிந்தார். மூத்தவன் இருக்க இளையவன் முடிசூடுவதா? மகுடம் சூட மறுத்தார்; தாயைக் கோபித்தார்; கோசலையைத் தேற்றினார்; தந்தை இறந்ததற்கு வருந்தினார். அப்பால் தந்தைக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து முடித்

தார். காவி வஸ்திரம் அணிந்து தன் தமையனை அழைத்துவரப் புறப்பட்டார். காட்டில் ஸ்ரீராமரைச் சந்தித்தார். அவர் காலில் விழுந்து கதறினர். அவரை அயோத்திக்கு அழைத்துவர அரும்பாடு பட்டார். 'தந்தை சொல் தவருத' ஸ்ரீராமர் இணங்கவில்லை. அவருடைய மன உறுதியைக் கண்ட பரதனது மனம் பரதவித்தது.

ஸ்ரீராமர் பரதனைத் தேற்றினர். அயோத்தி சென்று தாம் திரும்பி வரும் வரையில் ராஜ்யக் காரியங்களைப் பார்க்கும்படிச் சொன்னர். ஸ்ரீராமரின் உத்திரவுக்கு இணங்கிப் பரதன் ஊர் திரும்பினர். அவருடைய பாதுகைகளைப் பெற்று அவற்றைத் தம் தலைமேல் ஊருக்கு வெளியில் கொண்டு சென்ருர். ஓரிடத்தில் சிம்மாசனத்தில் அவைகளை வைத்துத் தினந்தோறும் பூஜை செய்தார். ஸ்ரீராமரின் பிரதிநிதியாக இருந்து அவர் திரும்பி வரும் வரையில் ஆட்சிபுரிந்தார். பதினன்கு வருஷ வனவாசம் முடிந்து ஸ்ரீராமர் அயோத்தி வந்தவுடன், அவரிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து மகிழ்ச்சி அடைந்தார்.

பிள்ளைகளே! பரதன் தன் தமையனிடம் வைத்த அன்பைப் பார்த்தீர்களா? நீங்களும் சகோதரர்களுடன் ஒற்றுமையாகவும் அன்பாகவும் இருக்கவேண்டும்.

---

4. இராவண வதம்

ஸ்ரீராமர் தம்பி இலட்சுமணருடனும் மனைவி சீதையுடனும் வனவாசம் செய்தார். அவர்கள் இலைதழைகளால் செய்த குடிசையில் வசித்து வந்தனர்.

இராவணன் ஒரு இராக்ஷசன். இலங்கைத் தீவின் அரசன். சீதையின் பேரழகைக் கேள்விப் பட்டான். சந்நியாசி வேஷம் பூண்டான். ராம இலட்சுமணர்கள் இல்லாத சமயம் பார்த்து சீதா தேவியைத் தூக்கிக்கொண்டு இலங்கை சென்ருன்.

ஸ்ரீராமரும் இலட்சுமணரும் குடிசையில் சீதை யைக் காணுமல் துக்கமடைந்தனர். எங்கும் தேவி யைத் தேடி அலேந்தனர். சுக்ரீவன் என்ற வானர அரசனேச் சந்தித்தனர். அவனுடனும் அவனுடைய மந்திரி ஹனுமானுடனும் நட்புக்கொண்டனர்.

ஹனுமான் சிறந்த வீரன். சீதையைத் தேடிச் சென்ருன். கடலேக் கடந்து இலங்கைத் தீவை அடைந்தான். ஒரு சிங்கார வனத்தில் சீதையைக் கண்டான். அவள் ஸ்ரீராமரையே நினேத்துப் புலம் பிக் கொண்டிருந்தாள். ஹனுமான் இராவணனது நகரைத் தீக்கிரையாக்கினுர். திரும்பி வந்து ஸ்ரீராம ரிடம் சீதையின் செய்தியைக் கூறினுர்.

ஸ்ரீராமர் வானரப் படையின் உதவியைக் கொண்டு கடலில் அணேகட்டி இலங்கைக்குச் சென் ருர். இராவணனுடன் யுத்தம் புரிந்தார். இராவண னேயும் மற்ற இராக்ஷசர்களேயும் கொன்ருர். சீதை யைக் கூட்டிக்கொண்டு திரும்பிச் சென்ருர்.

பதினுன்கு வருஷ வனவாசமும் முடிந்தது. ஸ்ரீராமர் இலட்சுமணருடனும் சீதையுடனும் அயோத்தி அடைந்தார். வெகு விமரிசையுடன் முடி சூட்டிக் கொண்டார்.

—

5. சூது விரும்பேல்

அஸ்தினபுரம் என்பது ஒரு நகரம். அதைத் திருதராஷ்டிரன் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் பிறவிக் குருடர். அவருக்கு நூறு பிள்ளைகள் தோன்றினர். அவர்களுக்குக் கௌரவர் என்று பெயர். கௌரவர்களில் மூத்தவன் துரியோதனன்.

திருதராஷ்டிரனுக்கு ஒரு தம்பி இருந்தார். அவர் பெயர் பாண்டு, பாண்டுவுக்கு ஐந்து குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களுக்குப் பாண்டவர்கள் எனப் பெயர். பாண்டவர்களில் மூத்தவர் தரும புத்திரர். அவருடைய தம்பிமார்கள் பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் எனப்படுவார்கள்.

கௌரவர்களின் தலைவனான துரியோதனன் மிகக் கொடியவன். மிகப் பொறாமைக் குணமுடையவன். பாண்டவர்கள் மிகப் பொறுமையுள்ளவர்கள். அவர்கள் தலைவரான தருமர் நல்ல நீதிமான்; மிகச் சாந்தமுள்ளவர்; யாவராலும் போற்றப் பட்டார்.

துரியோதனன் பாண்டவர்மேல் பொறாமை கொண்டான். நாட்டைத் தானே ஆளவேண்டுமென்றும், அவர்களை நாட்டை விட்டுத் துரத்த வேண்டுமென்றும் எண்ணங்கொண்டான்.

துரியோதனனுக்கு ஒரு மாமன் உண்டு. அவன் பெயர் சகுனி. அவன் வஞ்சகமுள்ளவன்; தந்திரசாலி; சூதாட்டத்தில் வல்லவன். துரியோதனனைக் கொண்டு தருமரைத் தன்னுடன் சூதாட அழைத்தான். கபடமற்ற தருமர் அதற்கு இசைந்தார். இரு

வரும் சதுரங்கம் விளையாடினர். தருமர் நாடு, நகரம் அனைத்தையும் தோற்றார். சகுனி வெற்றி பெற்றான். பாண்டவர்களும் அவர்கள் மனைவி திரௌபதியும், பன்னிரண்டு வருஷம் காட்டிலும், ஒரு வருஷம் மறைவாகவும் வசிக்கவேண்டுமென்று ஏற்பட்டது. அவ்வாறே பாண்டவர்கள் திரௌபதியுடன் காடு சென்று, பன்னிரண்டு வருஷ காலம் வெகு கஷ்டப்பட்டார்கள். ஒருவருக்கும் தெரியாமல் ஒரு வருஷ காலத்தை விராட நகரத்தில் கழித்தார்கள்.

பிள்ளைகளே! சூதாட்டத்தால் விளைந்த கேட்டைப் பார்த்தீர்களா!

---

6. பொறாமையால் வரும் கேடு

துரியோதனன் பாண்டவரிடம் பொறாமை கொண்டான். அவர்களைச் சூதாட்டத்தில் தோற்கடித்து நாட்டைவிட்டுத் துரத்தினான். பன்னிரண்டு வருஷ காலம் அவர்கள் காட்டிலும் நாட்டில் ஒரு வருஷம் மறைவாகவும் வசித்தனர்.

அப்பால் அவர்கள் அஸ்தினாபுரம் சென்று துரியோதனனிடம் தங்களுக்குச் சேரவேண்டிய பாதி ராஜ்யத்தைக் கேட்டனர். அப்பொழுதும் துரியோதனன் கொடுக்க மறுத்தான். துவாரகையின் அரசரான ஸ்ரீகிருஷ்ண பகவான் பாண்டவரின் தூதராகச் சென்றார். ஐந்து கிராமங்களையாவது அல்லது ஐந்து வீடுகளையாவது பாண்டவர்களுக்குக் கொடுத்துவிடும்படி அவர் துரியோதனனிடம் கெஞ்சிக் கேட்டார். ஒருவகைக்கும் துரியோதனன்

இணங்கவில்லை. ஸ்ரீகிருஷ்ணனை அவமதித்து அனுப்பினன்.

அதன் பிறகு பாண்டவர்கள் போருக்குத் தயாராயினர். ஸ்ரீகிருஷ்ண பகவான் அவர்களுக்கு உதவியாக நின்ருர். துரியோதனனும் அவனுடைய தம்பிமார்களும் சேனைகளுடன் எதிர்ப்பட்டனர். இருதிறத்தாருக்கும் **குருக்ஷேத்திரம்** என்னும் இடத்தில் பதினெட்டு நாள் கடும்போர் நடந்தது. துரியோதனனும் அவனைச் சேர்ந்தவர்களும் தோல்வியுற்று மடிந்தனர். பாண்டவர்கள் வெற்றி பெற்றனர். தருமபுத்திரர் முடிசூட்டிக் கொண்டார்.

கிருஷ்ணன் தூது

பிள்ளைகளே! பாண்டவர்கள் பொறுமையுடன் கஷ்டங்களை அனுபவித்தார்கள். கடைசியில் அவர்களுக்குப் பெருமை உண்டாயிற்று. துரியோதனன் பொருமைப்பட்டான். அவன் நாசமடைந்தான்.

7. பகாசுரன் வதம்

பாண்டவர்களில் பீமன் மிக்க பலசாலி. ஒரு சிறு மலையைப்போல் பருத்த உடலுடையவன். அவனை எதிர்த்தவர் எவரும் நசுங்குவது திண்ணம். பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷங்கள் காட்டில் வசித்தார்கள் அல்லவா? அப்பொழுது ஒரு சமயம் ஏகசக்கராபுரம் என்னும் ஊரில் சில காலம் வசித்தனர். அந்த ஊருக்குச் சமீபத்தில் ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டில் **பகாசுரன்** என்ற கொடிய இராக்ஷசன் வசித்தான். அவன் ஜனங்களைத் துன்புறுத்தி வந்தான். அவ்வூரார் அவனுக்கு இரையாகத் தினம் ஒரு வண்டிச் சோற்றையும் இரண்டு எருமைக் கடாக்களையும் அனுப்பி வந்தனர்.

பகன் வண்டி வந்து நின்றவுடன் இடிமுழக்கம் போன்ற சப்தமிட்டுக் கொண்டு ஓடிவருவான். வண்டியை ஓட்டி வந்த வாலிபனை நகத்தாலும் பற்களாலும் கிழித்துக் கடித்து உண்பான். எருமைக் கடாக்களையும் கொன்று தின்பான். ஒரு வண்டி உணவையும் உருட்டித் திரட்டி உண்டு ஏப்பம் விடுவான். அந்தோ! அவ்வூர் ஜனங்கள் என்ன செய்வார்கள்? அக்கொடியோனைக் கொல்ல வழி தெரியாமல் கண்ணீர் வடித்துக் கதறிக் கொண்டிருந்தனர்.

பீமனுக்கு இச் செய்தி தெரிந்தது. ஒரு நாள் தானே வண்டியை ஓட்டிச் செல்ல முன் வந்தான். பகாசுரனைக்கொல்லுவதாக உறுதிகூறினன். ஊரார் ஆச்சரியப்பட்டனர். பீமன் உயிருடன் திரும்பமாட்டான் என்று எண்ணினர்கள். எனினும் பீமன் கேட்டுக் கொண்டபடி அவனை அனுப்பினர்கள்.

காட்டை நெருங்கியதும் பீமன் ஓரிடத்தில் அமர்ந்து சோறு முழுவதையும் தின்றான். பசியுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பகன், கோபாவேசத்துடன் ஓடிவந்தான். தைரியத்துடன் பீமன் அவனை எதிர்த்தான். இருவருக்கும் மல் யுத்தம் நடந்தது. பீமன் ஒரே குத்து அவன் முதுகில் வைத்தான்; பகன் மூச்சுத் திணறிக் கீழே விழுந்தான். பீமன் அவன் மார்பிலேறிக் கழுத்தைப் பிடித்து நெறித்தான்; பகன் இறந்தான்.

வெற்றியுடன் திரும்பிய பீமனை அவ்வூரார் வாயாரப் புகழ்ந்தனர். சிறுவர்களே, ஊராருடன் பகை கொண்ட பகாசுரன் கதியைப் பார்த்தீர்களா?

'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்'

---

8. அரிச்சந்திரன் கதை

(முதல் பாகம்)

தசரத சக்கரவர்த்தியைப் பற்றி படித்தீர்கள் அல்லவா? அவருடைய முன்னோர்களில் அரிச்சந்திரன் என்று ஒரு சக்கரவர்த்தி இருந்தார். அவர் மெய்யே பேசுவார். சத்தியம் தவறுதவர். அவருடைய மனைவியின் பெயர் சந்திரமதி. அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் தேவதாசன்.

அரிச்சந்திரனைப் பூலோகத்தார் புகழ்ந்தனர்; தேவர்களும் மெச்சினர். தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் ஒரு நாள் தன் சபையோர்களைப் பார்த்து, உண்மையில் சிறந்த உத்தமன் யாரென்று கேட்டார். வசிஷ்டர் என்ற ரிஷி அரிச்சந்திரனைப்

புகழ்ந்தார். மற்றொரு முனிவரான விசுவாமித்திரர் அதனை மறுத்தார். வாக்குவாதம் உண்டாயிற்று. முடிவில் இந்திரன் விசுவாமித்திரரைப் பார்த்து, "நீர் பூலோகம் சென்று அரிச்சந்திரனைப் பொய்ய ஞக்கும்; இல்லையேல் உம் தவத்தில் பாதி அம் மன் னனுக்குத் தர வேண்டும்" என்றார்.

விசுவாமித்திரர் அயோத்தி அடைந்தார். அரிச் சந்திரனைப் பொய் சொல்லும்படிச் செய்ய பல சூழ்ச்சிகள் செய்தார். ஒரு யாகம் செய்யப்போவ தாகச் சொல்லி அதற்குப் பணம் வேண்டுமென்று கேட்டார். அரிச்சந்திரன் கொடுத்தார். ஆனால், முனிவர் அதை அவரிடமே ஒப்புவித்துச் சென்றார். அப்பால் விசுவாமித்திரர் இரண்டு அழகிய பெண்க ளைச் சிருஷ்டித்தார். அவர்கள் மன்னரிடம் சென்று ஆடிப்பாடி சந்தோஷம் உண்டாக்கினர். மன்னர் பரிசளித்தார். ஆனால் அவர்கள் தங்களை மணம் செய்துகொள்ள வேண்டுமென்று மன்றாடினர். அரிச்சந்திரன் கோபித்து அவர்களை விரட்டினார்.

விசுவாமித்திரர் கோபங்கொண்டார். மன்னன் அப்பெண்களை மணக்க வேண்டுமென்றார். அரிச் சந்திரன் மறுத்தார். "என் அரசை இழந்தாலும் இழப்பேன்; வேறு பெண்களை மணக்கமாட்டேன்" என்றார். முனிவர் பின்பு அவர் ராஜ்யத்தைப் பெற்றுக் கொண்டார்.

அப்பால் அவர் முன்பு தமக்குக் கொடுப்பதாக வாக்களித்த பணத்தைக் கேட்டார். சீக்கிரத் தில் கொடுப்பதாகச் சொல்லி அரிச்சந்திரன் அயோத்தியை விட்டு அகன்றார். மனைவி சந்திரமதி

யுடனும், தேவதாசனுடனும் கால் நடையாய் நடந்து காசிநகர் அடைந்தார்.

---

9. அரிச்சந்திரன் கதை

(இரண்டாம் பாகம்)

அரிச்சந்திரன் தன் மனைவி சந்திரமதியையும் மகன் தேவதாசனையும் ஓர் பிராமணனுக்கு அடிமையாக விற்றார். தான் சுடுகாடு காக்கும் புலையனுக்கு அடிமையானார். முனிவருக்குச்சேரவேண்டியபணத்தைக் கொடுத்தனுப்பினார். சந்திரமதியும் தேவதாசனும் பிராமணன் வீட்டில் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஒரு நாள் தேவதாசன் காட்டிற்குத் தருப்பை கொய்யப் போனான். அங்கே ஒரு பாம்பு கடித்து இறந்தான். இதைக் கேட்டு சந்திரமதி அலறித் தவித்தாள். பிராமணனிடம் விடைபெற்றுக் காட்டிற்குச் சென்றாள். இரவில் சவத்தைத் தேடித் திரிந்தாள். பிறகு சவத்தை எடுத்துக்கொண்டு சுடுகாடு அடைந்தாள்.

சவத்தைக் கொளுத்த ஏற்பாடுகள் செய்தாள். காவல் புரிந்த அரிச்சந்திரன், தன் எஜமானனுக்குச் சேரவேண்டிய பணத்தையும் வஸ்திரத்தையும் கேட்டார். சந்திரமதி தன் வரலாற்றைக் கூறி வருந்தினாள். அரிச்சந்திரனும் தன் மகன் இறந்ததற்கு வருத்தப்பட்டார். ஆயினும் எஜமானனுக்குச் சேரவேண்டிய வஸ்திரமும் பணமும் கொடுத்தாக வேண்டுமென்றார்.

சந்திரமதி அவற்றைப் பெற்றுவர பிராமண னிடம் சென்றாள். வழியில் ஒரு குழந்தை இறந்து கிடக்கக் கண்டாள். அது, காசி ராஜன் குழந்தை. குழந்தையைக் கையிலேந்திக் கதறினாள். அரச னுடைய வேலையாட்கள் அவளே குழந்தையைக் கொன்றாள் என்று சாதித்தனர். அரசன் அவ ளுக்கு மரண தண்டனை விதித்தான்.

அரிச்சந்திரன் தன் கையாலேயே அவளை வெட்ட வேண்டுமென்று ஏற்பாடாயிற்று. அதற்கு அவர் சிறிதும் மனங் கலங்கவில்லை. தன் கடமை யைச் செய்யத் தயாராயிருந்தார். அப்பொழுது விசுவாமித்திரர் தோன்றி ஒரு பொய் சொன்னால் சகல சௌபாக்கியங்களையும் திரும்பக் கொடுப்ப தாகச் சொன்னார். அரிச்சந்திரன் சம்மதிக்கவில்லை. அரசர் உத்திரவுப்படி சந்திரமதியை வெட்டினார். அது அவள் கழுத்தில் மாலையாக விழுந்தது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

அரிச்சந்திரன் தன் சத்தியத்தைக் கடைசி வரையில் காப்பாற்றினார். விசுவாமித்திரர் தம் தோல்வியை ஒப்புக்கொண்டு தவத்தில் பாதியைக் கொடுத்தார். அரிச்சந்திரன் மனைவியுடனும் மைந்தனுடனும் அயோத்தி அடைந்தார்.

"சத்தியமே ஜெயம்"

10. சிபிச் சக்கரவர்த்தி

முன் காலத்தில் வட இந்தியாவில் சிபி என் னும் சக்கரவர்த்தி ஆட்சி புரிந்தார். அவர் மகா உத்தமர். எல்லாப் பிராணிகளிடத்தும் அன்புள்ள

வர். தன்னுயிரைப்போல் பிற உயிரையும் கருது பவர். அவர் பெருமை உலகெங்கும் பரவிற்று.

தேவர்கள் அவர் மகிமையை அறிய விரும்பி னர். இந்திரன் கழுகு வடிவத்துடனும், அக்கினி புரு உருவத்துடனும் தோன்றினர்கள். கழுகு, புருவைத் துரத்திச் சென்றது. புரு பயந்து ஓடி, சிபியினிடம் அடைக்கலம் புகுந்தது. சிபி அதைக் கையில் எடுத் துத் தடவிக் கொடுத்தார்.

கழுகு அவரை அணுகித் தன்னுடைய இரை யைத் தன்னிடம் கொடுத்துவிடும்படி கேட்டது. அதற்குச் சிபி "வேறு எந்த மாமிசமும் ஈடாகக் கொடுப்பேன்; புருவைத் தரமாட்டேன்" என்ருர். புருவின் எடைக்குச் சமமான அளவுள்ள மாமி சத்தை அவரது சதையிலிருந்து அறுத்துக் கொடுக் கும்படி கழுகு கேட்டது. சக்கரவர்த்தி அதற்குச் சம்மதித்தார்.

தராசின் ஒரு தட்டில் புருவை வைத்தார். மற் ருேர் தட்டில் தமது சதையின் சிறிது பாகத்தை அறுத்து வைத்தார். தூக்கிப் பார்த்ததில் புருவின் நிறை அதிகமாயிருந்தது. பின்னும் கொஞ்சம் சதையை அறுத்து வைத்தார். அப்போதும் புரு இருந்த தட்டு கீழே தாழ்ந்தது. உடலில் உள்ள சதை களைச் சிறிது சிறிதாக அரிந்து வைத்துக்கொண்டே யிருந்தார். புருவின் எடைக்குச் சமமாகவில்லை. அவர் தாமே தட்டில் ஏறி உட்கார்ந்தார். இரு தட்டு களும் சமமாயின.

இந்திரனும் அக்கினி பகவானும் எதிர்ப்பட்ட னர். புருவின் உயிரைக் காப்பாற்றத் தன் உயிரை

விடத் தயாராயிருந்த மன்னனைப் புகழ்ந்தனர். செதுக்கி எடுக்கப்பட்ட சதைகள் முன்போல் கூடின. சிபியின் புகழ் எங்கும் பரவிற்று.

சிறுவர்களே! சிபிக் சக்கரவர்த்திக்கு உயிர்ப் பிராணிகளிடத்தில் இருந்த அன்பைப் பார்த்தீர்களா? அவரைப்போல் நீங்கள் எல்லாப் பிராணிகளிடத்தும் அன்புடனும் ஆதரவுடனும் இருக்க வேண்டும். அதனுல் உங்களுக்கு நன்மை உண்டாகும்.

---

11. புத்தர்

வட இந்தியாவில் கபிலவாஸ்து என்பது ஒரு நகரம். அதனைச் சுத்தோதனர் என்பவர் ஆண்டு வந்தார். அவருடைய மனைவியின் பெயர் மாயா தேவி. அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அக் குழந்தைக்குச் சித்தார்த்தர், கௌதமர் என்ற பெயர்கள் வழங்கப்பட்டன.

சித்தார்த்தர் மிக அழகுடையவர்; நற்குணம் பொருந்தியவர். இராஜ குமாரருக்கு வேண்டிய எல்லா வித்தைகளையும் கற்ருர். சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்ருர். சிறு பிராயம் முதல் அவரிடம் அன்பு, இரக்கம் முதலான குணங்கள் காணப்பட்டன. பிராணி இம்சை அவர் மனதை வாட்டியது. வேட்டையாடுதலை வெறுத்தார். அவரைச் சந்தோஷப்படுத்தப் பக்ஷிகளையோ மிருகங்களையோ யாரும் கொல்லக் கூடாதென்று சுத்தோதனர் உத்திரவிட்டார்.

சித்தார்த்தருக்கு விவாகம் நடந்தது. ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. ஆயினும் அவருக்கு உலக

இன்பத்தில் மனம் நாடவில்லை. மக்கள் படுந்துன்பங்களைக் கண்டு துக்கித்தார். சுத்தோதனர் சித்தார்த்தரை உலக வாழ்க்கையில் ஈடுபடுத்த மிகுதியும் முயன்றார். அவருக்கென அழகிய மாளிகையைக் கட்டி வைத்தார். துக்கத்தைத் தரக்கூடிய எச்செய்தியும் அவர் காதில் விழாமலும், எச்சம்பவமும் அவர் கண்ணில் படாமலும் இருக்க ஏற்பாடுகள் செய்தார். ஆயினும் பயனில்லை.

புத்தர்

தேரின் மீதேறி ஊர்வலம் வருங் காலங்களில் ஒரு சமயம் ஒரு நோயாளியைக் கண்டு மனம் நொந்தார். மற்றொரு சமயம் ஒரு தொண்டு கிழவனைப் பார்த்து மனம் கலங்கினார்; இன்னொரு சமயம் ஒரு பிணத்தைக் கண்டு மனம் பதைத்தார். "ஆஹா! இவ்வுலகம் துன்பம் நிறைந்துள்ளது" என்று அறிந்துகொண்டார்.

துன்பத்தை ஒழித்து மக்கள் இன்பமடையும் வழியை அறிய, அவர் ஆவல் கொண்டார். அரண்

மனை சுகத்தை வெறுத்தார். மனைவியையும் மகனையும் விட்டகன்று துறவி வேஷம் பூண்டார். காடு சென்று முனிவர்களைக் கண்டு அவர்களுடன் சம்பாஷித்தார். கடுந்தவம் புரிந்தார். அவருக்கு உண்மை புலப்படவில்லை.

அப்பால் கயை என்னும் ஊருக்குச் சென்றார். அங்கே ஓர் அரசமரத்தடியில் அமர்ந்து நெடுநேரம் சிந்தித்தார். தாம் நாடிவந்த உண்மை அவருக்குப் புலனாயிற்று. மக்களின் துன்பத்திற்குக் காரணம் ஆசையென்றும், ஆசையை ஒழித்தால் துன்பத்தை விட்டு நீங்கலாம் என்றும் அவர் அறிந்துகொண்டார். அதுமுதல் அவருக்குப் புத்தர் (உண்மையை அறிந்தவர்) என்னும் பெயர் வழங்கலாயிற்று.

புத்தர் தாம் கண்டறிந்த உண்மையைப் பல ஊர்களுக்குச் சென்று பிரசங்கம் செய்தார். அதுவே பௌத்த மதம் எனப்பட்டது. அவருடைய மனைவியும், மகனும் பௌத்தராயினர். அநேக சீடர்கள் அவருக்கு ஏற்பட்டனர். அவரால் ஏற்படுத்தப்பட்ட பௌத்த சந்நியாசிகள் அவருடைய கொள்கைகளைப் பலவிடங்களில் பரவச்செய்தார்கள். அக்கொள்கைகளில் முக்கியமானவை:- ஆசையை விட்டகலவேண்டும்; அன்பு பாராட்டவேண்டும். உயிர்ப் பிராணிகளைக் கொல்லக் கூடாது; எப்பொழுதும் நன்மையே செய்யவேண்டும் என்பனவாகும்.

புத்தர் சுமார் 45 வருஷ காலம் தமது மதத்தைப் போதித்தார். அவர் எண்பதாவது வயதில் காலமானார்.

---

12. அசோகர்

அசோகர் ஒரு சக்கரவர்த்தி. பாடலிபுத்திரம் என்பது அவர் தலைநகரம். அது, இப்பொழுது 'பாட்ண' என வழங்கப்படுகிறது. அவருடைய தந்தையின் பெயர் பிந்துசாரர். பிந்துசாரர் இறந்ததும் அசோகர் முடிசூட்டிக்கொண்டார். அவர் சுமார் 40 வருஷ காலம் அரசாண்டார். அவருடைய ஆட்சியில் இந்தியாவின் பெரும் பாகம் அடங்கியிருந்தது. சிற்றரசர்கள் அவருடைய ஆணைக்கு அடங்கிக் கப்பம் கட்டி வந்தார்கள்.

அசோகர் மிகப் பராக்கிரமசாலி. அவர் பட்டத்துக்கு வந்த பதின்மூன்ருவது வருஷத்தில் கலிங்க நாட்டு மன்னனுடன் போராட நேர்ந்தது. இரு திறத்தார்களிடமும் பெரிய சேனைகள் இருந்தன. கடும் போர் விளைந்தது. இரு கக்ஷிகளிலும் பலர் கொல்லப்பட்டனர். முடிவில் அசோகரே வெற்றி பெற்ருர்.

வெற்றியைக் கண்டு அவர் மனம் மகிழ்ச்சி கொள்ளவில்லை. யுத்தத்தினுல் பல வீரர்கள் இறந்ததைக் கண்டு மனம் வருந்தினுர். போரின் காரணமாக நாடெங்கும் கொடிய பஞ்சமும் பிணியும் தோன்றலாயின. ஜனங்கள் படும் கஷ்டங்களைக் கண்ணுற்ருர். அதற்கெல்லாம் காரணம் தாமே என்பதை அறிந்தார். மனம் பரதவித்தது. அதுமுதல் எக்காரணத்தைக் கொண்டும் யுத்தம் புரிவதில்லை என்று சபதம் செய்தார். அன்புநெறியைக் கைக் கொண்டார். போர் புரிந்து பிற நாட்டாரை ஜெயிப்

பதைவிட அன்பு பாராட்டி அவர்களை வசப்படுத்திக் கொள்ளுதல் மிகவும் மேலானது என்பது அவருக்குப் புலனாயிற்று. ஜீவ இம்சை செய்வதை



அசோகர் நாட்டிய தூண்

அறவே ஒழித்தார். க்ஷத்திரியராயினும் மாமிசம் உண்பதையும், வேட்டையாடுவதையும் முற்றிலும் நிறுத்தினார்.

ஜீவகாருண்யம், அன்பு, தயை, நல்லொழுக்கம் முதலியவற்றைப் போதித்த பௌத்தமதத்தை அவர் பின்பற்றலானார். பிரஜைகள் எல்லோரும் அம் மதக் கொள்கைகளைத் தழுவ வேண்டுமென்று உத்திரவிட்டார். பாறைகளிலும் கல் தூண்களிலும் எல்லோரும் கண்டறியுமாறு அக் கொள்கைகளைச் செதுக்கிவைத்தார். பெரிய சக்கரவர்த்தியாயிருந்தும், ஒரு பௌத்த சந்நியாசியைப்போல் ஆடை அணிந்து, செங்கோல் செலுத்தினார்.

அசோகர் பல சந்நியாசிகளை ஏற்படுத்தி வெளி நாடுகளிலும் பௌத்த மதத்தைப் பரவச் செய்தார். தம் பிரஜைகளைப்போலவே பிற நாட்டாரும் அன்பு நெறியைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்பது அவருடைய நோக்கம். அவரது முயற்சியால் சிரியா, எகிப்து, இலங்கைத் தீவு முதலிய நாடுகளில் பௌத்த மதம் பரவலாயிற்று.

குடிகளிடத்தில் அன்புமிகுந்த அசோகர் அவர்களின் நன்மைக்காகப் பல காரியங்கள் செய்தார். அநேக சாலைகளை உண்டாக்கினார். அவற்றின் இரு புறங்களிலும் பெரிய மரங்களை வைத்து வளர்த்தார். நாட்டில் பற்பல இடங்களில் குளங்களும் கிணறுகளும் வெட்டப்பட்டன; சத்திரங்களும் சாவடிகளும் கட்டப்பட்டன. மனிதருக்கும் விலங்குகளுக்கும் மருத்துவசாலைகள் பல ஏற்பட்டன. அசோகர் சுமார் 40 வருஷ காலம் அரசாண்டார்.

---

13. இராணி சம்யுக்தை

சுமார் 800 வருஷங்களுக்கு முன்பு வட இந்தியாவில் பல ராஜ்யங்கள் ஏற்பட்டிருந்தன. அவற்றை இராஜபுத்திர மன்னர்கள் ஆண்டுவந்தார்கள். கன்னோசி, டில்லி என்பவை அந்த ராஜ்யங்களில் பிரசித்தி பெற்றவை. கன்னோசியின் காவலனான ஜயசந்திரன் மிகப் பராக்கிரமசாலி. யானை வீரர்களும், குதிரை வீரர்களும், சிறந்த வில்லாளிகளும் அடங்கிய ஒரு பெரிய சேனை அவனிடம் இருந்தது. ஜயசந்திரன் அச் சேனையின் உதவியைக் கொண்டு சென்ற இடமெல்லாம் ஜெயம்பெற்று பேரும் புக

ழும் பெற்றுவந்தான். டில்லியின் அரசனுன பிருதிவி ராஜனும் சிறந்த வீரன் ; பேரறிவு படைத்தவன். அவன் காலத்தில் டில்லி ராஜ்யம் மிகச் சிறப்புற்று விளங்கிற்று. அவன் புகழ் கன்னேசியிலும் மேம் படத் தொடங்கியது. அது கண்டு பிருதிவியிடம் ஜயச்சந்திரன் அழுக்காறு கொண்டான்.

சம்யுக்தை ஜயச்சந்திரனின் மகள். அவள் அழகில் சிறந்தவள் ; அருங் குணம் உடையவள் ; வீரப் பெண்மணி. அவள் புகழ் நாடெங்கும் பரவியது. பிருதிவியின் வீரத்தைக் கேட்டதும் அவன்மீது அவளுக்கு ஆசை உண்டாயிற்று. பிருதிவியும் அவளது சிறந்த குணங்களைக் கேள்வியுற்று, சம்யுக்தையின்மீது ஆசை கொண்டான்.

சம்யுக்தைக்கு விவாக பருவம் நெருங்கிற்று. ஜயச்சந்திரன் ஓர் சுயம்வரச் சபை கூட்டினுன். சுயம்வரம் என்பது, ஒரு பெண் தன் கணவனைத் தானே தெரிந்து எடுத்துக்கொள்ளுவதாகும். சம்யுக்தையின் மாலையைப் பெறுவதற்கு வேண்டி மன்னர் பலர் வந்து கூடினர். ஜயச்சந்திரனுக்குத் தன்னிடத்தில் பொருமை உண்டு என்பது பிருதிவிக்குத் தெரியும். அவன் சுயம்வரத்திற்கு வரவில்லை. அவனை அவமானப்படுத்த எண்ணி, ஜயச்சந்திரன் பிருதிவியைப்போல் பதுமை ஒன்று செய்து, அதற்குப் பலவித வர்ணங்கள் பூசி, காவற்காரனைப் போல் சுயம்வர மண்டபத்தின் வாயிலில் நிறுத்தி வைத்தான்.

சம்யுக்தை, கையில் மலர் மாலையை ஏந்தி அங்கு கூடியிருந்த அரசர்களைப் பார்த்துக்கொண்டு சென்

ருள். பிருதிவிராஜன் காணப்படவில்லை. சம்யுக்தை ஒருவருக்கும் மாலையிடவில்லை. வாயிலருகில் பிருதிவியின் பதுமையைக் கண்டாள்; பிறகு அதற்கு மாலையிட்டாள்.

ஜயச்சந்திரன் பிருதிவியின்மீது பொறாமை கொண்டு, அவனைத் தொலைக்கத் தீர்மானித்திருந்தான். பிருதிவியின் பதுமைக்குத் தன் மகள் மாலையிட்டதைக் கண்டான்; கோபங்கொண்டான்; சம்யுக்தையைச் சிறைசெய்தான்.

கன்னேசி சம்பவம் டில்லிக்கு எட்டியது. பிருதிவி சம்யுக்தையின் மீது சந்தோஷங்கொண்டான். அவளை மீட்கக் கருதித் தன் சேனையுடன் கிளம்பினான். ஜயச்சந்திரன் அவனை எதிர்த்துப் போராடித் தோற்றான். பிருதிவி தன் தேவியுடன் டில்லி சென்றான். ஜயச்சந்திரனுக்குப் பிருதிவியின் மீது உள்ள கோபமும், பொறாமையும் அதிகரித்தன.

முகம்மது கோரி ஒரு அன்னிய அரசன். ஜயச்சந்திரனுக்கும் பிருதிவிக்கும் இடையே உள்ள உட்பகையை அவன் அறிந்து ஒரு சேனையுடன் அந்நாட்டின் மீது படையெடுக்க ஏற்பாடு செய்தான்.

அது கேட்ட பிருதிவி வட இந்தியாவிலுள்ள சிற்றரசர்களையெல்லாம் ஒன்றுசேர்த்தான்; ஒரு பெரிய சேனையைத் திரட்டினான். முகம்மது கோரியை எதிர்த்தான். இராணி சம்யுக்தை ஆண் வேஷம் பூண்டு அழகிய குதிரை மீது ஏறி, பிருதிவிக்குத் துணையாக நின்று போர் புரிந்தாள். முகம்மதிய சேனை தோல்வியுற்று ஓட்டம் பிடித்தது. கோரியும்

உயிர் தப்பினால் போதுமென்று வந்த வழி திரும்பினான்.

இச் சண்டையில் ஜயச்சந்திரன் ஒரு பக்கமும் சேரவில்லை. பிருதிவி நிச்சயமாகத் தோல்வியடைவான் என்று எண்ணியிருந்தான். அவன் வெற்றி பெறவே, ஜயச்சந்திரனுக்கு அவன் மீது உள்ள பொறாமை பின்னும் அதிகமாயிற்று.

அவனைத் தொலைக்க வழி தேடலானான். வட இந்தியாவிலுள்ள சிற்றரசர் பலரைப் பிருதிவியினின்று வேறுபடுத்தினான். பிருதிவியின் சேனாபலம் குறைந்தது. ஜயச்சந்திரன் முகம்மதுகோரிக்கு ஓர் ஆள் அனுப்பி, மீண்டும் படைகொண்டு வரும்படி வேண்டிக் கொண்டான்.

கோரி வெகு சந்தோஷத்துடன் மறுபடியும் படையெடுத்தான். துணைப் பலம் குறைந்தும் பிருதிவி மனம் தளரவில்லை. ஆண் சிங்கத்தைப்போல் போருக்குக் கிளம்பினான். சம்யுக்தையும் சலியாமல் மெய்க்காவலன் உருக்கொண்டு, பிருதிவிக்குத் துணையாக நின்றாள்.

யமுனா நதிக் கரையில் போர் தொடங்கியது. இரு பக்கத்திலும் பலர் மாண்டனர். பிருதிவியும் சம்யுக்தையும் ஆவேசத்துடன் பாய்ந்து பகைவர் பலரைக் கொன்றனர். எனினும் முடிவில் முகம்மது கோரியே வெற்றி பெற்றான். முதலில் சம்யுக்தையும், பின்னர் பிருதிவியும் இறந்தனர். வெற்றிபெற்ற கோரி டில்லியைக் கைப்பற்றினான். அப்பால் ஜயச்சந்திரனையும் போரில் வென்று, அவனுடைய

நாட்டையும் வசப்படுத்திக் கொண்டான். அது முதல் நம் நாட்டில் அன்னியரின் ஆதிக்கம் தலையெடுக்கத் தொடங்கிற்று. பிருதிவியும் இராணி சம்யுக்தையும் நம் நாட்டின் சுதந்திரத்தைக் காக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் வீணாயின.

---

14. பத்மினி

முகம்மது கோரியைப் பின்பற்றி அநேக முகம்மதிய மன்னர்கள் டில்லியில் ஆட்சி புரியலானார்கள். அவர்களில் அல்லாவுத்தீன் ஒருவன். அவன் சிறந்த வீரன். பேரும் புகழும் பெற்றவன். நாடுகளைக் கைப்பற்றுதலில் அவனுக்கு ஆசை அதிகம். அவன் தன் சேனையுடன் சென்று பல நாடுகளைக் கைப்பற்றினான்.

மேவார் என்பது ஒரு இராஜபுத்திர ராஜ்யம். அதனைப் பீமசிங்கன் என்பவன் ஆண்டு வந்தான். அவனுக்குப் பேரழகு வாய்ந்த மனைவி ஒருவள் இருந்தாள். அவள் பெயர் பத்மினி. அல்லாவுத்தீன் பத்மினியின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டான். அவளை மணந்து கொள்ள விரும்பினான். எப்படியாவது அவளை வசப்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தான். பெரிய சேனையுடன் வந்து அல்லாவுத்தீன் சித்தூரை வளைத்துக் கொண்டான். இராஜபுத்திர வீரர்கள் கோட்டைச் சுவர்களைக் காத்து நின்றனர். அவர்களுக்கும் முகம்மதிய வீரர்களுக்கும் கடுமையான போர் நிகழ்ந்தது. இரு பக்கத்திலும் பலர் மாண்டனர். வெற்றியாவது தோல்வியாவது யாருக்

கும் ஏற்படவில்லை. முகம்மதிய வீரர்கள் களைத்துப் போயினர். அல்லாவுத்தீன் சித்தூரைக் கைப்பற்றிப் பத்மினியை அடையலாம் என்று எண்ணினான். அவ்வெண்ணம் பலிக்கவில்லை.

அல்லாவுத்தீன் பத்மினியை நேரில் ஒரு தடவை பார்த்தால் போதுமென்று எண்ணினான். இராஜ புத்திரர்கள் அதற்கு இடங் கொடுப்பார்களானால் போரை நிறுத்துவதாகச் சொன்னான். இராஜபுத்தி ரர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. நிலக்கண்ணாடி யின் மூலமேனும் அவள் அழகைக் காண விரும்பி னான். இராஜபுத்திரர் அவ்வேண்டுகோளுக்கு இணங் கினர். அல்லாவுத்தீன் பத்மினியின் அழகைக் கண்ணாடியில் கண்டு களித்தான்.

அப்பால் அல்லாவுத்தீன் கோட்டையை விட்டு வெளியே சென்றான். பீமசிங்கனும் மற்றவர்களும் சிறிது தூரம் கூடச்சென்று வழியனுப்பினர். அச் சமயம் அருகே மறைந்திருந்த அல்லாவுத்தீனின் வீரர்கள் திடீரென்று தோன்றி பீமசிங்கனைச் சிறை யிட்டுச்சென்றார்கள். பத்மினியை அனுப்பினாலன்றி பீமசிங்கனை விடுதலை செய்ய முடியாதென்று அல்லாவுத்தீன் செய்தி அனுப்பினான்.

பத்மினி மிகவும் தந்திரசாலி; தைரியமுடைய வள். அவள் தன் கணவனை மீட்க ஓர் உபாயம் செய் தாள். தான் அல்லாவுத்தீனைக் காண வருவதாகத் தெரிவித்தாள். ஏழு நூறு மூடுபல்லக்குகள் சித் தூரைவிட்டுப் புறப்பட்டன. பல்லக்குகளில் இருந்த வர்களும், அவற்றைத் தூக்கிச் சென்றவர்களும் சிறந்த இராஜபுத்திர வீரர்கள் ஆவார்கள். பத்மினி

பீமசிங்கனுடன் தனிமையில் பேச ஏற்பாடாயிற்று. அச்சமயம் பீமசிங்கன் ஒரு பல்லக்கில் ஏறித் தப்பிச் சென்றுன். இராஜபுத்திர வீரர்கள் கூடச் சென்றனர். அல்லாவுத்தீனின் வீரர்கள் அவர்களைப் பின் தொடர்ந்தும் பயன்படவில்லை.

அல்லாவுத்தீன் பெரிய சேனையுடன் சென்று சித்தூரை முற்றுகை செய்தான். கடும்போர் விளைந்தது. பீமசிங்கனும், மற்ற இராஜபுத்திர வீரர்களும் மாண்டனர். சித்தூர் எதிரி வசமாயிற்று. பத்மினியும் மற்ற இராஜபுத்திரப் பெண்களும் எதிரி கையில் அகப்படுவதைவிட உயிரை விடுவதே மேலானதெனக் கருதினர்; ஒரு பெரிய தீயை வளர்த்து அதில் விழுந்து மடிந்தனர். அல்லாவுத்தீன் கோட்டைக்குள் சென்றதும் அது பாழாய்க் கிடப்பதைக் கண்டான்.

---

15. பாபர்

முகம்மதியருக்குப் பிறகு முகலாயர் என்னும் ஒரு ஜாதியார் டில்லியில் ஆட்சிபுரியத் தொடங்கினார்கள். அவர்கள் தலைவரின் பெயர் பாபர். பாபர் இளம் பிராயத்தில் இந்தியாவுக்கு வடக்கில் உள்ள ஓர் சிறிய நாட்டிற்கு அரசராயிருந்தார். சிறிது காலத்தில் அவர் தம் விரோதிகளால் துரத்தப்பட்டார். பல வருஷங்கள் அவர் காடுகளிலும் மலைகளிலும் திரிந்தார். காபூல் என்பது இந்தியாவுக்கு வடமேற்கில் உள்ள ஒரு சிறு நாடு. பாபர் அதைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினர்.

அக் காலத்தில் இப்ரஹிம்லோடி என்னும் முகம்மதிய அரசன் டில்லியில் ஆண்டு வந்தான். அவன் ஜனங்களை மிகவும் வருத்தினான். அதனால் அவர்கள் கலகம் செய்தார்கள். காபூலில் அரசு செலுத்திய பாபரைத் தமக்கு உதவி செய்யுமாறு அவர்கள் வேண்டினார்கள். இந்தியாவில் ஒரு பெரிய ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டுமென்று பாபர் எண்ணினார். அதற்கு இப்பொழுது தகுந்த சமயம் வாய்த்தது. அவர் ஒரு பெரிய சேனையுடன் வந்தார். இப்ரஹிம்லோடி அவரை எதிர்த்தான். பானிப் பட்டு என்னுமிடத்தில் ஒரு பெரிய சண்டை நடந் தது; பாபர் ஜெயமடைந்தார். டில்லியைக் கைப் பற்றி முகலாய ராஜ்யத்தை ஸ்தாபித்தார். அவரை எதிர்த்து வந்த வேறு சில அரசர்களையும் அவர் தோற்கடித்தார். அவர் சுமார் நான்கு வருஷ காலம் ஆட்சி புரிந்தார்.

பாபர் என்னும் சொல்லுக்குச் சிங்கம் என்பது பொருள். பாபர் சிங்கத்தைப் போல் தைரியமும் பலமும் வாய்ந்தவர். குதிரை சவாரி செய்வதிலும் நீந்துவதிலும் அவருக்குப் பிரியம் உண்டு. அவர் சிறந்த கல்விமான். சிறு வயதில் அவர் மிகவும் கஷ்டப்பட்டாரல்லவா? ஆகவே அவர் அரசரான தும் குடிகளை மிகவும் அன்பாக நடத்தினார். அவர் களுடைய கஷ்டங்களைத் தமது கஷ்டங்களாகப் பாவித்து, அவற்றை நீக்க முயன்றார். அவருக்குக் கடவுளிடத்தில் விசேஷ பக்தி உண்டு.

பாபரின் குமாரனான ஹுமாயூன் ஒரு சமயம் கொடிய நோயால் வருந்தினான். அவன் இறக்கும்

படியான நிலைமை வந்தது. பாபர் மிகவும் கவலைப் பட்டார். அவர் ஒரு பெரியவரிடம் சென்று தமது மகன் பிழைக்கும் வழியை அறிய விரும்பினார். அப் பெரியவர் 'உலகில் மிகவும் அருமையாகக் கொண் டாடும் பொருளைக் கடவுளுக்குச் சந்தோஷமாகக் கொடுத்தால் உன் மகன் பிழைத்தெழுவான்' என் றார். பாபர் மிக அருமையாகக் கருதிய பொருள் அவரது உயிரேயாகும். அதை அவர் கொடுக்கத் தீர்மானித்தார். சில நாட்களில் ஹுமாயூன் பிழைத் தெழவே, பாபர் அதே வியாதியால் பீடிக்கப்பட்டு இறந்தார்.

பிள்ளைகளே! பாபருக்குப் புத்திரனிடத்தில் இருந்த அன்பையும், கடவுளிடத்தில் உள்ள பக்தி யையும் கவனித்தீர்களா?

---

16. நூர்ஜஹான்

பாபரைப் பின்பற்றி அநேக முகலாய சக்கர வர்த்திகள் டில்லியில் ஆண்டனர். அவர்களில் பாப ரின் பேரனான அக்பர் மிகப் பிரசித்திபெற்றவர். அக்பருக்குப் பிறகு அவருடைய மகன் ஜஹாங்கீர் பட்டம் பெற்றார். ஜஹாங்கீரின் மனைவி நூர்ஜ ஹான். அவள் நல்ல அழகு வாய்ந்தவள்; சிறந்த அறிவாளி; வீரமும் தைரியமும் பொருந்தியவள். அரசாளும் திறமையைப் பெற்றவள். ஜஹாங்கீரின் ஆட்சியின் பெருமைக்கு நூர்ஜஹானே பெரிதும் காரணமாவாள். நூர்ஜஹான் ஓர் பாரசீகப்பிரபுவின்

மகள். அப் பிரபுவின் பெயர் கியாஸ்பெக். அக்பர் காலத்தில் கியாஸ்பெக் தம் குடும்பத்தாருடன் இந்தியாவுக்கு வந்தான். அக்பர் கியாஸ்பெக்கின் திறமையையும், யோக்கியதையையும் கண்டு அவரிடத்தில் பிரியம் கொண்டார். அவருக்கு ராஜாங்கத்தில் ஒரு வேலை கொடுத்தார். அவருடைய மகள் நூர்ஜஹானை ஷேர் ஆப்கன் என்ற ஒரு பாரசீக வீரனுக்கு மணம் செய்வித்தார்.

நூர்ஜஹான்

ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்ததும், அவர் ஷேர் ஆப்கனுக்கு ஒரு உயர்ந்த பதவி அளித்தார். அவரை வேறொரு மாகாணத்திற்கு ஒரு ஜாகீர்தாராக அனுப்பினார். ஆனால் சிறிது காலத்தில் ஷேர் ஆப்கன் கொல்லப்பட்டார். நூர்ஹஜான் தன் தகப்பனுடன் வசித்து வந்தாள்.

---

17. ஜஹாங்கீரும் நூர்ஜஹானும்

அக்காலத்தில் ஜஹாங்கீர் அவளைக் கண்டார்; அவளழகை விரும்பி மணம் செய்து கொண்டார். அதுமுதல் நூர்ஜஹானே ராஜ்ய காரியங்களைக் கவனிக்கத் தலைப்பட்டாள். அவள் பெயராலேயே அரசாங்க உத்திரவுகள் பிறந்தன; நாணயங்கள்

வழங்கப்பெற்றன. ஜஹாங்கீர் சுகமாகக் காலங் கழித்தார். சுமார் பதினைன்கு வருஷ காலம் நூர் ஜஹான் ராணியாக இருந்து தன் அதிகாரத்தைச் செலுத்தினுள். அவள் காலத்தில் அரசாட்சி செவ்வையாக நடந்தது. ஜனங்கள் சந்தோஷமாக இருந்தனர். இந்தியாவை மிகத் திறமையுடன் ஆண்ட ராணிகளில் நூர்ஜஹானும் ஒருவள்.

---

18. தஞ்சாவூர்-சரித்திரமும் புராணக் கதைகளும்

[குறிப்பு:—கீழே சில ஊர்களைப் பற்றிய சரித்திர சம்பந்தமான விஷயங்களும், புராணக் கதைகளும் கூறப்பட்டுள்ளன. உபாத்தியாயர்கள் உள்ளூர் சம்பந்தமான புராணக் கதைகளையும், பிள்ளைகளுக்கு உற்சாகம் அளிக்கும் முறையில் எடுத்துரைக்க வேண்டும். கோவில் மதில்களிலும் தூண்களிலும் காணப்படும் கல்வெட்டுக்கள் இதற்கு மிகவும் பயன்படக் கூடும்.]

வெகுகாலம் முதற்கொண்டு தென் இந்தியா சோழர், சேரர், பாண்டியர் என்ற மூன்று அரசவம்சத்தினரால் ஆளப்பட்டு வந்தது. வடக்கில் சோழ ராஜ்யமும், தெற்கில் பாண்டிய ராஜ்யமும், மேற்கில் சேர ராஜ்யமும் இருந்தன. திருவாரூரும், திருச்சிக்குச் சமீபத்திலுள்ள உறையூரும் சோழர்களின் தலைநகர்களாக விளங்கின.

சுமார் 1000 வருஷங்களுக்கு முன் தஞ்சாவூர் சோழ மன்னர்களின் முக்கிய பட்டணமாகஆயிற்று. சோழ மன்னர்களில் மிகவும் பிரசித்தி பெற்றவர் ராஜராஜ சோழர். அவர் தஞ்சாவூரிலுள்ள பெரிய

கோவிலைக் கட்டினார். ராஜராஜருக்குப் பிறகு அவருடைய மகன் ராஜேந்திர சோழரும், அப்பால் ராஜேந்திரனின் பேரனான குலோத்துங்க சோழரும் பட்டத்திற்கு வந்தனர்.

அப்பால் சிறிது காலம் சோழநாடு வடக்கில் பிரசித்தி பெற்று விளங்கிய விஜயநகர ராஜ்யத்துக்கு உட்பட்டிருந்தது.

சுமார் 250 வருஷங்களுக்கு முன் மகாராஷ்டிரத் தலைவரான வெங்காஜி தஞ்சாவூரைக் கைப்பற்றிக் கொண்டார். வெங்காஜி, சிவாஜி மகாராஜாவின் சகோதரர். வெங்காஜிக்குப் பிறகு அவருடைய சந்ததியார்கள் தஞ்சாவூரில் ஆண்டார்கள். அவர்களில் சரபோஜி முக்கியமானவர்.

அப்பால் தஞ்சாவூரும், அதைச் சுற்றியுள்ள மற்ற இடங்களும் ஆங்கிலேயர் வசமாயின.

தஞ்சாவூர் வரலாறு

தற்காலம் தஞ்சாவூர் இருக்குமிடத்தில் முன் காலத்தில் தஞ்சன் என்ற ஓர் ராக்ஷசன் ஆண்டு வந்தான். அவன் கொடியவன்; குடிகளைத் துன்புறுத்தினான். துன்பம் பொறுக்கமாட்டாமல் ஜனங்கள் திருமாலைப் பிரார்த்தித்தனர். திருமால் பூமியில் தோன்றி தஞ்சனைக் கொன்றார். அவன் சாகும் போது, தான் அரசு செலுத்திய இடம் தன் பெயராலேயே வழங்கப்பட வேண்டும் என்று பகவானை வேண்டிக்கொண்டான். அவ்வாறே கடவுள் அருள் புரிந்தார். அது முதல் அவ்வூர் தஞ்சாவூர், தஞ்சை என்னும் பெயர்கள் பெறலாயின.

மனுநீதிச் சோழன்

முன்காலத்தில் திருவாரூர் சோழ மன்னர்களின் தலைநகராக இருந்ததென்று சொன்னோம் அல்லவா? அதில் ஆண்ட சோழ மன்னர்களில் மனுநீதிச் சோழன் முக்கியமானவர். அவருடைய நேர்மையான ஆட்சியைப் பின்வரும் கதையால் அறியலாம்.

ஒருநாள் அரசனுடைய மகன் ரதத்தின்மீதேறி ஊர்வலம் வந்தான். அச்சமயம் பசுவின் இளங் கன்று ஒன்று துள்ளி விளையாடிக் கொண்டுவந்து தேர்க்காலில் சிக்கி இறந்தது. அதை அறிந்து அரசகுமாரன் ஆருத்துயரமடைந்து அரண்மனை திரும்பினன்.

கன்றைப் பறிகொடுத்த தாய்ப் பசு அலறித் தவித்தது. கண்களில் நீர் ததும்ப அது அரண்மனை வாயிலை அடைந்தது. அங்கு தொங்கவிடப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியை அது தன் கொம்புகளால் அசைத்து ஓசை செய்தது. ஓசையைக் கேட்ட மன்னர்பிரான் விரைவாக ஓடி வந்தார்; பசுவைப் பார்த்தார்; அதன் துக்கத்திற்குக் காரணத்தை மந்திரி மூலம் அறிந்தார். “ஆஹா, இப் பசுவின் கன்று இறந்ததற்கு என் மகனல்லவா காரணம். இப் பசு கன்றை இழந்து வருந்துவது போல நானும் என் மகனை இழந்து வருந்துவதே நியாயம்'' என்று உணர்ந்தார். அவர் தேரின் மீது ஏறிச் சென்று மகன்மீது தேரை நடத்தினர். ராஜ குமாரன் இறந்து போனன். உடனே கருணைக் கடலாகிய சிவபெருமான், மன்னர் முன் தோன்றி

ஞர். அவருடைய நீதிக்கு மெச்சினர். கடவுள் அருளால் ராஜகுமாரன் உயிர்பெற்றெழுந்தான்.



பசுங் கன்றும் உயிர் பெற்றது. இச் சோழ மன்னனுடைய நீதி தவருத ஆட்சி இன்னும் உலகத்தாரால் போற்றப்படுகிறது.

---

19. மதுரை-சரித்திரமும் புராணக் கதைகளும்

மதுரை, பாண்டிய மன்னர்களின் தலைநகராகும். பாண்டியர்கள் கல்வியையும் கற்ருேரையும் ஆதரித்தனர்; தமிழ்ச் சங்கங்களை ஏற்படுத்தித் தமிழை அபிவிருத்தி அடையச் செய்தனர். சங்கப் புலவர்கள் இயற்றிய தமிழ் நூல்களை இன்றும் நாம் காணலாம்.

பாண்டிய நாடு சிறிது காலம் விஜயநகர ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பாண்டிய மன்னர்கள்

விஜயநகரச் சக்கரவர்த்திகளுக்குச் சிற்றரசர்களாயிருந்தனர்.

பிறகு பாண்டியரின் ஆட்சி முடிவடைந்தது. நாயக்க மன்னர்கள் மதுரையில் ஆட்சிபுரியலானார்கள். அவர்கள் முதலில் விஜயநகர மன்னருக்கு உட்பட்டிருந்து, பின்னர் சுயாதீனம் பெற்றனர். நாயக்க மன்னர்களில் முதல் அரசர் விசுவநாத நாயக்கர் ஆவார். அவர் திறமையாக ஆட்சி புரிந்தார். ஏராளமான பொருள் செலவு செய்து மதுரை ஸ்ரீமீனாக்ஷி அம்மன் கோவிலைப் புதுப்பித்து அழகு பெறச் செய்தார். நாயக்க மன்னர்களில் கீர்த்தியைப் பெற்ற திருமலை நாயக்கரும் ராணி மங்கம்மாளும் இவ்வூரில் பல கட்டிடங்கள் கட்டினார்கள். அவைகளை இப்பொழுதும் காணலாம். அப்பால் நாயக்கர்களின் ஆட்சி முடிவுபெற்றது. மைசூரில் ஆண்ட முகம்மதிய மன்னர் ஹைதர் அலி என்பவர் மதுரையின் ஆட்சியைக் கைக்கொண்டார். சிறிது காலஞ் சென்றபின் ஆங்கிலேயர் மதுரையையும், அதன் சுற்றுப்புறத்தையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர்.

பாண்டியன் நெடுமாறன்

நெடுமாறன் ஒரு பாண்டிய அரசர். அவர் முதுகு சற்று வளைந்திருந்ததால் அவரைக் கூன் பாண்டியன் என்றும் சொல்லுவதுண்டு. அவர் ஜைன (சமண) மதத்தைச் சேர்ந்தவர். அவருடைய பிரஜைகளில் பலர் அம் மதத்தைத் தழுவலானார்கள். மன்னர் மனைவியாகிய மங்கையர்க்கரசி சைவ மதத்தைச் சார்ந்தவள். தன் கணவன் ஜைன மதத்

தில் பற்று கொண்டதற்கு அவள் மனம் வருந்தினுள்; அவர் சைவ மதத்தைத் தழுவ வேண்டுமென்று எண்ணினுள். திருஞானசம்பந்தர் என்ற சிவ பக்தரை அவள் தனக்கு உதவி செய்யுமாறு பிரார்த்தித்தாள். இச் சமயத்தில் பாண்டியனுக்கு வெப்பு நோய் கண்டது. ஜைனர்கள் எவ்வளவு முயன்றும் அரசனைக் குணப்படுத்த முடியவில்லை. திருஞானசம்பந்தர் சிவபெருமான் பெயரால் விபூதியைப் பூசவே, நோய் நீங்கி அரசர் சுகமடைந்தார். அப்பால் ஜைனர்களுக்கும், திருஞானசம்பந்தருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. சம்பந்தர் வெற்றி பெறவே, ஜைனர்கள் கழுவேற்றப்பட்டனர். பாண்டியனும் அவருடைய பிரஜைகளும் சைவ மதத்தில் சேர்ந்தார்கள். அரசனுடைய வளைந்த முதுகும் சிவபெருமான் அருளால் நேராயிற்று.

மதுரையின் வரலாறு

தற்பொழுது மதுரை இருக்குமிடம் முன் காலத்தில் கடம்ப வனமாயிருந்தது. அங்கே சிவனடியார்கள் பலர் வசித்தனர். கடம்ப மாலையைக் கொண்டு அவர்கள் பகவானைத் தினமும் பூஜித்தனர். பகவான் அவர்களுடைய பக்திக்கு மெச்சி, அவர்களுக்கு அடிக்கடி காட்சி கொடுப்பதுண்டு.

தனஞ்சயன் என்பவன் ஒரு சிவபக்தன். அவன் ஒருநாள் அவ்வனத்தில் தங்கினுன்; சிவபெருமானின் காட்சி கண்டான். பாண்டிய மன்னனிடம் அவன் அதைத் தெரிவித்தான். அன்று இரவு சிவபெருமான் அரசன் கனவில் தோன்றினுர். கடம்ப

வனத்தை அழித்து, அங்கு ஒரு கோவிலைக் கட்டும்படி பகவான் அரசனுக்கு ஆணையிட்டார்.



மதுரைக் கோவில்

அரசன் அவ்வாறே வனத்தை அழித்து ஒரு கோவிலைக் கட்டினார். கோவிலில் சிவபெருமான் எழுந்தருளினர். கோவிலைச் சுற்றிலும் ஜனங்கள் குடியேறினர். இப்படியாக ஒரு நகரம் உண்டாயிற்று.

அந் நகரத்தைச் சிவபெருமான் பெருமைப் படுத்த எண்ணினர். தம் சிரசிலுள்ள மதுரமான கங்காநீரில் சிறிது பாகத்தை அதில் வார்த்தார். ஊர் புனிதமாயிற்று. அது முதல் அவ்வூருக்கு **மதுரை** எனப் பெயர் வழங்கலாயிற்று. அதுவே பாண்டிய நாட்டின் தலைநகராயிற்று.

மலையத்துவஜன் ஒரு பாண்டிய மன்னன். அவருடைய மனைவியின் பெயர் காஞ்சனமாலை. அவர்களுக்கு நெடுநாளாகப் புத்திரப் பேறு இல்லை. மன்னன் ஒரு யாகம் செய்தார். யாக அக்கினியி லிருந்து ஒரு பெண் குழந்தை தோன்றினள். அவள் திவ்விய லட்சணங்கள் பொருந்தியவள். அவளுடைய கண்கள் மீன் வடிவங் கொண்டு அழகாயிருந்தபடி யால் அவளுக்கு **மீனாக்ஷி** என்னும் பெயர் ஏற் பட்டது.

மலையத்துவஜனுக்குப் பிறகு மீனாக்ஷி சிம்மா சனம் ஏறினள். சிறிது காலம் சென்ற பின் அவள் திக்விஜயம் செய்யப் புறப்பட்டாள். அஷ்ட திக்கு பாலகர்களை அவள் ஒவ்வொருவராக ஜெயித்தாள். கடைசியில் அவள் சிவபெருமானுடன் போர் செய் யத் தலைப்பட்டாள். ஆனால் அப்பெருமானைக் கண்டதும் அவளுடைய வீரமும், தைரியமும் மறைந் தன. பெண்களுக்குரிய லட்சணங்கள் அவளிடம் தோன்றின. அப்பெருமானுக்கே மாலையிட அவள் இப் பூமியில் தோன்றியவள். அவ்வாறே இருவருக் கும் விவாகம் நடந்தது. அப்பால் சிவபெருமான் சுந்தர பாண்டியன் என்ற பெயரோடு மதுரையில் ஆட்சி புரியலானார்.

20. திருச்சிராப்பள்ளி சரித்திரமும் புராணக் கதைகளும்

திருச்சிராப்பள்ளி முதலில் சோழ நாட்டில் சேர்ந்திருந்தது. இதன் சமீபத்தில் உள்ள உறையூர், சில காலம் சோழர்களின் தலைநகராக இருந்தது என்று படித்தீர்கள்.

கரிகால் சோழன் என்பவர் காவேரியின் குறுக்கே அணைகட்டிக் கால்வாய்கள் பல வெட்டினார். அப்பால் சில காலம் திருச்சிராப்பள்ளி பல்ல



திருச்சி மலைக்கோவில்

வர்களால் ஆளப்பட்டது. இவ்வூரில் உள்ள மலைக் கோவில் பல்லவ அரசர்களால் கட்டப்பட்டது.

இந்த ஜில்லாவிலுள்ள 'கங்கைகொண்டசோழபுரம்' ராஜேந்திர சோழனல் உண்டாக்கப்பட்டது. அம் மன்னன் வடக்கில் கங்கா நதி வரையில் சென்று வெற்றி கொண்டு திரும்பியதற்கு அடையாளமாக அவ்வூர் ஏற்பட்டது. ராஜேந்திரன் மகன் குலோத்துங்க சோழன் இந்த ஜில்லாவில் பல ஏரிகளை வெட்டி நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தினர்.

அப்பால் திருச்சிராப்பள்ளியும் அதன் சுற்றுப்புறமும் விஜயநகர ராஜ்யத்தில் சேர்ந்தன. விஜயநகர சக்கிரவர்த்தியின் பிரதிநிதியான விஸ்வநாத



ஸ்ரீரங்கம் கோவில்

நாயக்கர் இங்குள்ள தெப்பக்குளத்தை வெட்டினர். அவர் இவ்வூரைச் சுற்றிலுமிருந்த காடுகளை அழித்து, அவற்றை விளையும் நிலங்களாக்கினர். ஸ்ரீரங்கத்திலுள்ள கோவிலை அவர் புதுப்பித்தார்.

நாயக்க மன்னர்களில் கீர்த்திபெற்றவரான ராணி மங்கம்மாள் இவ்வூரில் ஒரு அரண்மனையைக் கட்டினார். இக் கட்டிடத்தில் இப்பொழுது பல ஆபீசுகள் நடைபெறுகின்றன.

பின்னர் நாயக்கர்களின் ஆட்சி முடிவடைந்தது. திருச்சிராப்பள்ளி, ஆற்காடு நவாப்பின் ஆட்சிக்கு உட்பட்டது. நவாப் பட்டவிஷயமாக சந்தாசாகிப் என்பவருக்கும் முகம்மது அலிக்கும் போராட்டம் உண்டாகியபொழுது, முகம்மது அலி திருச்சிராப் பள்ளிக் கோட்டைக்குள் ஒளிந்துகொண்டார். சந்தாசாகிப் தம் சேனையுடன் திருச்சியை முற்றுகை செய்தார். ஆங்கிலேயர் உதவியைப் பெற்று முகம் மது அலி விடுதலை அடைந்து நவாப் ஆனார்.

அப்பால் திருச்சிராப்பள்ளி ஆங்கிலேயர் வச மாயிற்று.

திருச்சிராப்பள்ளியின் வரலாறு

இலங்கையின் காவலனான இராவணனைப்பற்றி நீங்கள் படித்தீர்கள். அவன் சிறந்த சிவ பக்தன். அவனுக்கு ஒரு சகோதரன் இருந்தான். அவன் பெயர் திரிசிரஸ். திரிசிரசுக்குத் தலைகள் மூன்று. இவனும் இராவணனைப் போலவே சிவபக்தியில் சிறந்தவன்.

ஒரு சமயம் திரிசிரஸ் திருச்சிராப்பள்ளி இருக்கு மிடத்திற்கு வந்தான். அங்கு சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தான்; பகவான் காட்சி அளிக்கவில்லை. திரிசிரஸ் தன் தலைகளில் ஒன்றை வெட்டிப் பகவானுக்குப் பலி கொடுத்தான். அதிலும்

பலனில்லை. இரண்டாவது தலையையும் வெட்டிக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்தான். அப்பொழுதும் ஈசன் அருள் கிட்டவில்லை. மூன்ருவது தலையையும் அவன் துணிக்கச் சித்தமானுன். உடனே சிவபெருமான் தோன்றி அவன் கேட்ட வரங்களைக் கொடுத்தார். அது முதல் அவ்வூருக்குத் திரிசிரபுரம் அல்லது திருச்சிராப்பள்ளி என்ற பெயர்கள் ஏற்பட்டன.

ஸ்ரீரங்க ஸ்தல புராணம்

ஸ்ரீராமரைப்பற்றி நீங்கள் படித்தீர்கள் அல்லவா? அவர் மகாவிஷ்ணுவின் அம்சம். துஷ்டர்களைக் கொன்று சிஷ்டர்களைக் காப்பாற்றவே பகவான் பூமியில் ஸ்ரீராமராகத் தோன்றினுர். தந்தை சொல்லைக் காக்க ஸ்ரீராமர் காட்டிற்குச் சென்ருர். பதினுன்கு வருஷ காலம் அவர் அங்கே வசித்தார். அவர் பல துஷ்ட அரக்கர்களை அங்கே கொன்ருர்.

சீதாதேவியும், தம்பி இலக்ஷ்மணரும் ஸ்ரீராமருடன் காட்டில் வசித்தார்கள். ஒரு சமயம் ஸ்ரீராம இலக்ஷ்மணர் இல்லாத சமயத்தில் இராவணன் சந்நியாசி வேஷம் பூண்டு சீதையைத் தன் ஊராகிய இலங்கைக்குக் கொண்டுபோய் விட்டான். ஸ்ரீராமர் ஒரு பெரிய வானர சேனையுடன் இலங்கை அடைந்தார்; இராவணனுடன் யுத்தம் செய்து அவனையும் மற்ற அரக்கர்களையும் அவர் கொன்ருர். பின்னர் சீதையுடன் அவர் அயோத்தி திரும்பினுர்.

விபீஷணன், இராவணனுடைய இளைய சகோதரன். அவன் விஷ்ணு பக்தன். அவன் தமையனை

வெறுத்தான். ஸ்ரீராமரிடம் அடைக்கலம் புகுந்தான். அவர் அவனை இலங்கைக்கு அரசனாக்கினார். ஸ்ரீராமர் கூடவே அவன் அயோத்தி சென்றான். அவரைவிட்டுப் பிரிந்து இலங்கைக்குத் திரும்ப அவனுக்கு மனமில்லை.

ஸ்ரீராமரிடம் ஒரு விமானம் இருந்தது. அது அவருடைய முன்னோர்களால் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அதில் மகாவிஷ்ணு எப்பொழுதும் சயனித்துக் கொண்டிருப்பார். அந்த விமானத்தை ஸ்ரீராமர் விபீஷணனுக்குக் கொடுத்தார். அதை அவர் பூஜித்துவருமாறு அவனுக்குக் கட்டளையிட்டார். விபீஷணன் மகிழ்ச்சியுடன் விமானத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பினான். வழியில் ஸ்ரீரங்கத்தில் அவன் தங்கினான். அவ் விமானத்தை ஒருக்காலும் கீழே வைக்கக் கூடாது. அதை அறியாத விபீஷணன் விமானத்தைக் கீழே வைத்துவிட்டான். பின்னர் அதை நிலத்தைவிட்டுப் பெயர்க்க அவனால் முடியவில்லை. மனமுடைந்து அவன் பகவானைத் துதித்தான்.

மகாவிஷ்ணு அவன் முன் தோன்றினார். இலங்கைக்குச் சென்று அங்கிருந்து தினமும் வந்து விமானத்தைப் பூஜிக்கும்படி அவர் அவனுக்குக் கட்டளையிட்டார். விபீஷணன் அவ்வாறே வெகு காலம் செய்து வந்தான். விமானம் இருந்த இடத்தைச் சுற்றி சோழ மன்னர்கள் ஒரு கோவில் கட்டினார்கள். கோவிலின் உட்புறத்தில் ஒரு ஊர் உண்டாயிற்று.

---

21. சுந்தர பாண்டியன்

மதுரையில் ஆண்ட பாண்டிய அரசர்களில் மார வர்ம சுந்தர பாண்டியன் மிகவும் கீர்த்திவாய்ந் தவர். அவர் சுமார் 700 வருஷங்களுக்கு முன் ஆட்சி புரிந்தார். வெகு காலம் தனி அரசு கொண்டிருந்த பாண்டிய மன்னர்கள் சுமார் 300 வருஷ காலம் சோழ மன்னர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந் தனர். அப்பால் சோழ அதிகாரம் குன்றத் தலைப் பட்டவுடன் பாண்டியரின் அதிகாரம் மீண்டும் தலையெடுக்கலாயிற்று. இவ்வாறு பாண்டிய நாட்டை மீண்டும் சுயேச்சையாய் ஆண்ட முதல் அரசன் மாரவர்ம சுந்தர பாண்டியனே ஆவார்.

சுந்தர பாண்டியன் பட்டத்துக்கு வந்ததும் தம் சேனையுடன் சென்று சோழனைப் போரில் வென்றார்; தஞ்சாவூரையும் உறையூரையும் கைப்பற்றினார். தம் மைச் சோழ நாட்டிற்கு அதிபதியாகச் செய்து கொண்ட பிறகுதான் அந்த நாட்டை அவர் சோழ மன்னனுக்குத் திருப்பிக் கொடுத்ததாகச் சொல்லப் படுகிறது.

சுந்தர பாண்டியனைப் பின்பற்றி பதின்மூன்று பாண்டிய அரசர்கள் ஆண்டார்கள்.

---

22. திருமலை நாயக்கர்

பாண்டியருக்குப் பின் மதுரையில் ஆண்ட நாயக்க மன்னர்களில் திருமலை நாயக்கர் மிகக் கீர்த்தி வாய்ந்தவர். மதுரையிலும் மற்றும் சில இடங்களிலும் அவர் பல அழகிய கட்டிடங்களை

அமைத்திருக்கின்றார். அவருடைய உருவச்சிலையை மதுரைப் புது மண்டபத்திலும், மீனாக்ஷி அம்மன் கோவிலிலும், இன்னும் திருப்பரங்குன்றம், அழகர் கோவில் முதலிய இடங்களிலும் காணலாம்.

திருமலை நாயக்கர் சுமார் 36 வருஷ காலம் அரசாண்டார். அவராட்சியில் முதல் பன்னிரண்டு வருஷம் திருச்சிராப்பள்ளியும், பிறகு மதுரையும் அவருடைய முக்கிய நகரங்களாக இருந்தன.

நாயக்கர் சிறந்த பக்திமான். பிரஜைகளின் நன்மையின் பொருட்டு அவர் பல சத்திரம் சாவடி



திருமலை நாயக்கர் மஹால்

களைக் கட்டினார்; கிணறு குளங்களை வெட்டினார்; சாலைகளைப் போட்டார். அவர் கட்டிய கட்டிடங்களில் மிகவும் சிறந்தது திருமலை நாயக்கர் மஹால்

என்பதாகும். இது, மதுரையின் தென் கிழக்குப் பாகத்தில் உள்ளது. மர சம்பந்தமில்லாமல் சுண்ணும்பாலும் செங்கல்லாலுமே அமைக்கப்பட்ட இக் கட்டிடம், பார்வைக்கு மிகவும் அழகாகக் காணப் படுகிறது.

மதுரையில் அவர் கட்டிய வேறு கட்டிடங்கள் புது மண்டபம், ராயர் கோபுரம் என்பனவாகும். மதுரைக்குக் கிழக்கில் சுமார் இரண்டு மைல் தூரத் தில் உள்ள பெரிய தெப்பக்குளம் இவரால் அமைக் கப்பட்டதே.

இன்னும் மீனுக்ஷி அம்மன் கோவிலின் சில பாகங்கள் அவரால் கட்டப்பட்டன.

---

23. ராணி மங்கம்மாள்

நாயக்க ராஜ வம்சத்தில் மிகச் சிறந்தவர் ராணி மங்கம்மாள் ஆவார். இவர் திருமலே நாயக்கரின் பேரன் மனேவியார். தமது பேரனுக்கு தக்க வயது வரும் (சுமார் 15 வருஷ காலம்) வரையில் திருச்சி ராப்பள்ளியே இவருடைய முக்கிய பட்டணமாக இருந்தது. இவர், நாட்டை வெகு திறமையுடன் ஆண்டார்.

இவர் ஆண்மையும் வீரமும் பொருந்தியவர்; மன`வலிமையும் ராஜ தந்திரமும் உள்ளவர்; புத்தி கூர்மை வாய்ந்தவர் : தயாள குணம் படைத்தவர்.

திருவாங்கூர் அரசர்கள் நாயக்க மன்னர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டு அவர்களுக்குக் கப்பம் கட்டிவந்தார்கள். மங்கம்மாள் காலத்தில் அவ்வாறு

கப்பம் செலுத்துவதைத் திருவாங்கூர் அரசர் நிறுத்திவிட்டார். அச் சிற்றரசனைக் கட்டாயப் படுத்தி இதை வாங்கிவர மங்கம்மாள் ஒரு சேனையை அனுப்பினார். திருவாங்கூர் அரசர் அச்சேனையை (நயவஞ்சகமாய்) மடக்கி அழித்துவிட்டார்.

ராணி மங்கம்மாள் இச் செய்தியைக் கேட்டு அடங்காக் கோபங்கொண்டார். அந்தச் சிற்றரச னைத் தண்டிக்க மற்றொரு பெரிய சேனையை அவர் அனுப்பினார். இச் சேனை திருவாங்கூர் அரசனைத் தோற்கடித்தது. ஏராளமான பணத்தையும் நகை களையும் கொடுத்து, அந்த மன்னன் ராணியாருடன் சமாதானம் செய்துகொண்டான்.

ராணி மங்கம்மாள் காலத்தில் நாட்டுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டன. பிரயாணிகள் செல்லுவ தற்கு அனுகூலமாகப் பல சாலைகளை இவர் உண் டாக்கினார்; அவைகளில் நிழல் தரும் மரங்களை வைத் துப் பயிர் செய்தார்; சாலைகளில் இடைக்கிடையே தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்தார்; பல கிணறுகளை யும் குளங்களையும் வெட்டினார். இன்னும் இவர் யாத்திரீகர்களின் சௌகரியத்திற்காகப் பல சத் திரங்களையும் சாவடிகளையும் கட்டினார். மதுரையில் இவர் பெயரால் விளங்கும் சத்திரத்தை இன்றைக் கும் நாம் காணலாம். இவ்வாறு பிரஜைகளுக்குப் பெரிய உபகாரியாயிருந்து, அவர்களுக்குப் பல நன் மைகள் செய்த ராணியாரின் குணாதிசயத்தை இன் றும் நாம் பாராட்டுகிறோம். இவர் காலத்தில் நாடு மிகவும் நல்ல நிலையில் இருந்தது. அப்பால் அது சீர்குலையத் தலைப்பட்டது.

---

24. ராஜராஜ சோழர்

சோழ அரசர்களில் மிகவும் கீர்த்திபெற்றவர் ராஜராஜ சோழர். இவர் இருபத்தொன்பது வருஷ காலம் ஆட்சி புரிந்தார். இவர் காலத்தில் சோழ ராஜ்யம் மிக உன்னத நிலையை அடைந்தது.

இவர் சிறந்த போர்வீரர். வலிமை பொருந்திய நிலப்படையும், கடற்படையும் இவரிடம் இருந்தன. தமது சேனைகளின் உதவியைக் கொண்டு இவர் சேர, பாண்டிய மன்னரைப் போரில் வென்றார்; வடக்கில் வலிமையுற்றிருந்த கீழ்ச் சாளுக்கிய மன்னன் விமலாதித்தனை ஜெயித்தார். அவர் தமது பெண்ணை அவனுக்கு விவாகம் செய்து கொடுத்தார். இவ்வாறு தமது வெற்றியையும் புகழையும் எங்கும் நிலை நாட்டிய பின், மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யலானார். நாடெங்கும் அமைதி நிலவிற்று. கைத்தொழில்களும் வியாபாரமும் முன்னேற்றமடைந்தன. ஜனங்கள் சுகமாக வாழ்ந்தனர்.

ராஜராஜர் சைவ மதப்பற்றுள்ளவர். சிவபெருமானிடத்தில் அவருக்கு விசேஷ பக்தி உண்டு. இவர் தஞ்சாவூரிலுள்ள பெரிய கோவிலைக் கட்டினார். இக் கோவிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்குப் பிரஹதீஸ்வரர் எனப் பெயர். ராஜராஜன் இக் கோவிலின் திருப்பணிக்கு ஏராளமான சொத்துக்களை அளித்தார்; வைரம், வைடூரியம், முத்து முதலிய நவரத்தினங்களாலாகிய ஆபரணங்களும், பொன் வெள்ளியால் ஆகிய பண்டங்களும், அவரால் வழங்கப்பட்டன. இக் கோவிலிலுள்ள சதுர வடிவமான விமானம் பார்க்கத் தக்கது. அது 216

அடி உயர முடையது. இதன் பக்கங்களில் பல அழ



தஞ்சாவூர்க் கோவில்

கிய சிலைகளையும், சிற்பங்களையும் காணலாம். இக் கோவிலில் சுவாமி சந்நதிக்கு எதிரே அமைந்துள்ள

நந்தி மிகப் பெரியது. இது ஒரே கல்லில் செதுக்கப் பெற்றது. இதன் உயரம் 12 அடி; நீளம் சுமார் 20 அடி.

ராஜராஜர் சைவமதப் பற்றுள்ளவராயினும், பிற மதங்களில் விசாலமான நோக்கமுள்ளவர். தஞ்சாவூர்ப் பெரிய கோவிலின் ஒரு பாகத்தில் காணப்படும் பௌத்த சிலைகள் இதற்கு அறிகுறியாகும். மேலும் நாகப்பட்டணத்தில் அமைக்கப்பட்ட ஒரு பௌத்த ஆலயத்துக்கு இவர் பல நில தானங்கள் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

---

25. சேரன் செங்குட்டுவன்

சேர மன்னர்களில் மிகவும் புகழ் படைத்தவர் சேரன் செங்குட்டுவன். இவருடைய நாடு மலைவளம் பொருந்தியது. வஞ்சி என்பது இவருடைய தலைநகரம். இவர் மிகுந்த வீரமும் தைரியமும் பொருந்தியவர். பெரிய நிலப்படையும் கடற்படையும் இவரிடம் இருந்தன. சோழ, பாண்டியரை இவர் ஜெயித்தார்.

இவருடைய தந்தை சோழ மன்னருடன் போர் புரிந்து இறந்தார். அச் செய்தியைக் கேட்ட இவருடைய தாயார் போர்க்களம் புகுந்து உயிர் நீத்தார். வீரபத்தினியாகிய தம் தாயாரின் ஞாபகார்த்தமாக செங்குட்டுவன் ஒரு வீரக்கல் நாட்ட நினைத்தார். கற்சிலையைத் தயார் செய்தார்; அதைக் கங்கையில் நீராட்ட எண்ணினார்; சிலையுடன் வட நாடு புகுந்தார். வடநாட்டு மன்னர்கள் அவரை எதிர்த்துவந்தனர். செங்குட்டுவன் அவர்களை வென்றார். வெற்றி

யுடன் சிலையை நீராட்டிக் கொணர்ந்து நட்டு வைத்தார். அதற்குப் பூஜை செய்தார்; விழாக் கொண்டாடினார்.

பத்தினிக் கடவுளாகிய கண்ணகி சேர நாடடைந்து கணவனுடன் விண்ணுலகை அடைந்தாள். செங்குட்டுவன் அவளுடைய உருவச்சிலையை நட்டு அதற்கு ஒரு கோவிலும் கட்ட நினைத்தார். சிலைக்குக் கல் எடுக்க இமயம் சென்றார். ஆரிய மன்னர்களாகிய கனக விஜயர்களைப் போரில் வென்றார். கல்லை அவர்களே சேர நாட்டுக்குத் தூக்கிச் செல்லுமாறு செய்தார்; பத்தினிக்கடவுளின் சிலையை நட்டு, அதற்கு ஒரு ஆலயமும் கட்டுவித்தார். செங்குட்டுவன் சைவ மதத்தைச் சேர்ந்தவர்; விசேஷ தெய்வ பக்தி உள்ளவர். அவர் சிறந்த கல்விமான்; தமிழையும் தமிழ் வித்துவான்களையும் ஆதரித்தார். அவருடைய சகோதரர் இளங்கோவடிகள் என்பவர் தமிழில் மிகப் புலமை வாய்ந்தவர். அவர் இயற்றிய **சிலப்பதிகாரம்** என்னும் நூல் இன்றும் யாவராலும் போற்றப்படுகிறது.

The B. N. Press, Mount Road, Madras.

2772